BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# மதுரைக் காஞ்சியில் நகர நாகரிகம், சமூக வாழ்வியல் மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் – ஓர் ஆய்வு

# Madurai kanjiyil Nagara Nagarigam, Samuga Vazhviyal Matrum Panbattu Adaiyaalangal - Oor Aaivu

**மு. யாசின்.,**M.A., M.Phil.,NET.,

உதவிப்பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, புதுக்கல்லூரி (த), சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**M. Yasin.,** M.A.,M.Phil.,NET.,
Assistant Professor, PG & Research Department of Tamil, The New College (A), Chennai- 600 014, Tamilnadu, India.
Email : professoryasintamil@gmail.com

**Abstract**

Sangam literature stands as one of the most significant sources for understanding the antiquity and cultural heritage of Tamil civilization. Among the works of the Pattuppāṭṭu anthology, Maduraikkanchi serves as a valuable literary document that comprehensively portrays the social, economic, political, and cultural life of ancient Madurai during the Sangam age. Composed by Mangudi Maruthanar, the work extols the greatness of the Pandya king Thalaiyalanganathu Seruventra Nedunchezhiyan and vividly describes the prosperity of the city of Madurai. The text records various aspects of urban life, including city planning, commercial development, social order, the status of women, artistic traditions, and cultural advancement. This study examines the urban civilization, social life, and cultural identities reflected in Maduraikkanchi and seeks to highlight their historical and cultural significance. Through a critical analysis of the text, the study demonstrates the importance of Maduraikkanchi as a literary and historical source for understanding the socio-cultural landscape of the Sangam period.

**Keywords**

Maduraikkanchi, Sangam Literature, Urban Civilization, Social Life, Cultural Identity, Pandya Kingdom, Ancient Madurai.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழர் நாகரிகத்தின் தொன்மைச் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மதுரைக்காஞ்சி, சங்ககால மதுரை நகரின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு வாழ்க்கையை முழுமையாகப் பதிவு செய்துள்ள இலக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. மாங்குடி மருதனாரால் இயற்றப்பட்ட இந்நூல், பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் ஆட்சிச் சிறப்புகளையும் மதுரை மாநகரின் வளத்தையும் எடுத்துரைக்கிறது. நகரமைப்பு, வாணிப வளர்ச்சி, சமூக ஒழுங்கு, பெண்களின் நிலை, கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி ஆகிய பல்வேறு கூறுகளை மதுரைக்காஞ்சி பதிவு செய்கிறது. இக்கட்டுரை மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் நகர நாகரிகம், சமூக வாழ்வியல் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை ஆய்வு நோக்கில் அணுகி அவற்றின் வரலாற்று மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை வெளிக்கொணர முயல்கிறது.

**முக்கியச் சொற்கள்**

மதுரைக்காஞ்சி, சங்க இலக்கியம், நகர நாகரிகம், சமூக வாழ்வியல், பண்பாடு, பாண்டியர், மதுரை.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர் சமூகத்தின் தொன்மையான வாழ்க்கை முறைகள், பண்பாட்டு விழுமியங்கள், வரலாறு மற்றும் அரசியல் அமைப்புகளை அறிந்து கொள்வதற்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டின் ஆறாவது நூலான மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனாரால் இயற்றப்பட்டு, சங்ககால மதுரை மாநகரின் நகரமைப்பு, மக்கள் வாழ்க்கை, பொருளாதார வளம், கலை வளர்ச்சி மற்றும் பாண்டிய அரசின் ஆட்சிச் சிறப்புகளை விரிவாக எடுத்துரைக்கிறது.

நகரத்தின் தெருக்கள், சந்தைகள், கோட்டைகள், மக்களின் வாழ்வியல் மற்றும் மன்னனின் ஆட்சித்திறன் ஆகியவற்றை நுணுக்கமாகப் பதிவு செய்வதன் மூலம், மதுரைக்காஞ்சி ஒரு இலக்கியப் படைப்பாக மட்டுமன்றி, சங்ககால நகர நாகரிகத்தை அறிய உதவும் முக்கிய வரலாற்று ஆவணமாகவும் திகழ்கிறது.

**ஆய்வுச் சிக்கல்**

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நகர நாகரிகம் மற்றும் சமூக வாழ்வியல் குறித்த செய்திகள் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் நகர வளர்ச்சி, சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் ஒருங்கிணைந்த ஆய்வுப் பார்வையில் முழுமையாக ஆராயப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. இந்நிலையில் மதுரைக்காஞ்சி பதிவு செய்யும் நகர நாகரிகமும் சமூக வாழ்வியலும் எந்த அளவிற்கு சங்ககால தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன என்பதே இவ்வாய்வின் சிக்கலாக அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் நகர நாகரிகக் கூறுகளை ஆராய்தல். சங்ககால சமூக வாழ்வியலை வெளிக்கொணர்தல்.பொருளாதார மற்றும் வாணிப வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்தல்.பண்பாட்டு அடையாளங்களையும் நிலையாமைச் சிந்தனையையும் ஆராய்தல்.

**ஆய்வு முறை**

இவ்வாய்வு விளக்கவியல் (Descriptive Method) மற்றும் பகுப்பாய்வு முறை (Analytical Method) அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. மதுரைக்காஞ்சி முதன்மை ஆதாரமாகவும், சங்க இலக்கிய ஆய்வு நூல்கள் துணை ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**ஆய்வு எல்லை**

மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் நகர நாகரிகம், சமூக வாழ்வியல், பொருளாதார அமைப்பு, பெண்களின் பங்கு, பண்பாட்டு மரபுகள், அரசியல் நிர்வாகம் மற்றும் நிலையாமைச் சிந்தனை ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமைகிறது.

**மதுரைக்காஞ்சியும் மாமதுரையும் - ஓர் அறிமுகம்**

*“முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை*
*பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய*
*……….. ………… ………”*

*(த.இ. வ. ப- 104)*

மதுரைக்காஞ்சி பத்துப்பாட்டு நூல்களில் ஆறாவது நூலாகும். இதனை மாங்குடி மருதனார் இயற்றியுள்ளார். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் ஆட்சிச் சிறப்புகளையும் மதுரை மாநகரின் வளத்தையும் எடுத்துரைக்கும் இந்நூல் காஞ்சித் திணை சார்ந்ததாகும். காஞ்சித் திணையின் அடிப்படை கருத்தான நிலையாமையை மையமாகக் கொண்டு மனித வாழ்வின் நிலையற்ற தன்மையையும் அரசாட்சியின்மை,

*“மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி*
*இடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை*
*…………. …………. …………*
*புத்தே ளுலகங் கவினிக் காண்வர*
*மிக்குப்புக ழேய்திய பெரும்பெயர் மதுரை”*

*(ம.கா. ப-87)*

அறநெறிகளையும், வளம் பொருந்திய அரியபொருள்களுடன், தேவரும் வந்து கான்கின்ற அழகும், பெரும்புகழினை உடையது மதுரை என்று இந்நூல் வலியுறுத்துகிறது.

**மதுரை நகரின் நகரமைப்பு நாகரிகம்**

சங்ககாலத் தமிழர்களின் நகர வளர்ச்சி, கட்டிடக்கலை, வாணிப அமைப்பு மற்றும் அரசியல் நிர்வாகத் திறனை வெளிப்படுத்தும் முதன்மை இலக்கியச் சான்றாக மதுரைக்காஞ்சி விளங்குகிறது. பாண்டிய அரசின் தலைநகராகத் திகழ்ந்த மதுரை, அரசியல் மையமாக மட்டுமன்றி பொருளாதார, பண்பாட்டு மற்றும் சமய மையமாகவும் விளங்கியதைக் கவிஞர் மாங்குடி மருதனார் தெளிவாக எடுத்துரைக்கிறார். நகர நாகரிகம் என்பது வெறும் கட்டிட வளர்ச்சியைக் குறிப்பதல்ல. மாறாக, திட்டமிட்ட நகர அமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள், மக்களின் வாழ்வியல், வாணிப வளர்ச்சி, சமூக ஒழுங்கு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வடிவமாகும். அந்த அடிப்படையில் மதுரைக்காஞ்சி சங்ககால மதுரையின் நகர நாகரிகத்தை முழுமையாகப் பதிவு செய்கிறது.

**தெருக்கள்**

மதுரை நகரின் தெருக்கள் அகலமாகவும் ஒழுங்காகவும் அமைந்திருந்தன. மக்கள் நடமாட்டம், வணிகப் போக்குவரத்து மற்றும் அரச நிகழ்வுகளுக்கேற்ப அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

*"வகைபெற வெழுந்து வான மூழ்கிச்*
*……………. ………….. …………..*
*யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்"*
*(ம.கா. ப-53)*

எனக் குறிப்பிடுவதன் மூலம், நகரின் தெருக்கள் ஆற்றைப் போன்ற அகலமும் நீளமும் கொண்டிருந்ததை உணர்த்துகிறார் இவ்வரிகள் நகரத் திட்டமிடலின் மேம்பட்ட நிலையைக் காட்டுகின்றன. சங்ககாலத்தில் தெருக்கள் வெறும் போக்குவரத்திற்காக மட்டுமின்றி சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு செயல்பாடுகளின் மையங்களாகவும் இருந்தன. விழாக் காலங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்த நிலையையும், பகல் மற்றும் இரவு நேரங்களிலும் நகர வாழ்க்கை தொடர்ந்து இயங்கியதையும் மதுரைக்காஞ்சி சுட்டுகிறது. இதன்மூலம் மதுரை ஒரு "இரவுநேர பொருளாதார நகரம்" (Night Economy City) என்ற நிலையை அடைந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

**மாட மாளிகைகள்**

மதுரை நகரின் செல்வச் செழிப்பை எடுத்துக்காட்டும் முக்கிய அம்சமாக மாட மாளிகைகள் விளங்குகின்றன. மதுரையில் உயர்ந்த மாடங்களைக் கொண்ட வீடுகள் அமைந்திருந்ததாக மதுரைக்காஞ்சி விவரிக்கிறது. பல அடுக்குகளைக் கொண்ட கட்டிடங்கள், காற்றோட்டமிக்க சாளரங்கள், நிலாமுற்றங்கள், அலங்கரிக்கப்பட்ட மாடங்கள் ஆகியவை நகரக் கட்டிடக்கலையின் மேம்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

மாளிகைகளின் உயரத்தை

*"விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்*
*தொல்வழி நிலைய வணங்கு குடை நெடுநிலை*
*……………. ……………. …………*
*வையை யன்ன வழங்குடை வாயில்".*
*(ம.கா. ப-52)*

விளக்கும்போது அவை மேகங்களைத் தொடும் அளவுக்கு உயர்ந்திருந்ததாகக் கவிஞர் உவமையுடன் கூறுகிறார். இது அக்கால கட்டிடத் தொழில்நுட்ப வளர்ச்சியை உணர்த்துகிறது. மாட மாளிகைகள் சமூகப் படிநிலையையும் பிரதிபலித்தன. அரச அதிகாரிகள், செல்வந்த வணிகர்கள் மற்றும் உயர்குடியினர் இவ்வகை மாளிகைகளில் வாழ்ந்தனர். எனவே கட்டிட அமைப்பு சமூகப் பொருளாதார நிலையையும் வெளிப்படுத்துகிறது.

**அரண்களும் பாதுகாப்பு அமைப்பும்**

ஒரு நகரத்தின் வளர்ச்சிக்கு அதன் பாதுகாப்பு அமைப்பு முக்கியமானதாகும். மதுரை நகரம் பல அடுக்குப் பாதுகாப்பு அமைப்புகளைக் கொண்டிருந்ததாக மதுரைக்காஞ்சி பதிவு செய்கிறது. நகரைச் சுற்றி உயர்ந்த மதில்களும், ஆழமான அகழிகளும் அமைந்திருந்தன. நகரின் வாயில்கள் வலிமையான கதவுகளைக் கொண்டிருந்தன என்பதையும் காவலர்கள் இடைவிடாது கண்காணிப்பில் ஈடுபட்டனர். இது போன்ற பாதுகாப்பு அமைப்புகள் பாண்டிய அரசின் இராணுவத் திறனையும் நிர்வாகத்

திறமையையும் வெளிப்படுத்துகின்றன. சங்ககாலத்தில் அரசியல் போட்டிகளும் போர்களும் நிகழ்ந்த நிலையிலும் மதுரை பாதுகாப்பான நகரமாகத் திகழ்ந்ததற்கு இவ்வரண் அமைப்புகளே காரணமாக இருந்தன.

**சந்தைகள்**

சந்தைகள் வெறும் வாணிப மையங்களாக மட்டுமல்லாமல் சமூகச் சந்திப்புகளுக்கான தளங்களாகவும் விளங்கின. பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளும் இடமாக அவை அமைந்தன. இது பொருளாதார வளர்ச்சியோடு சமூக மற்றும் பண்பாட்டு பரிமாற்றத்திற்கும் வழிவகுத்தது.

*"குண கடல் கொண்டு குடகடன் முற்றி*
*இரவு மெல்லையும் விளிவிட னரியா"*

*(ம.கா. ப-40)*

என்று மதுரையின் பொருளாதார வளர்ச்சியின் மையமாக சந்தைகள் விளங்கின. நகரின் பல பகுதிகளில் தனித்தனி வணிகத் தெருக்கள் அமைந்திருந்தன. பொன், முத்து, மணிக்கற்கள், நறுமணப் பொருட்கள், ஆடைகள், தானியங்கள், உலோகப் பொருட்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

சந்தைகள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி விற்பனைப் பகுதிகள் இருந்தன. இதனால் நகரின் பொருளாதார நிர்வாகம் ஒழுங்குமுறையுடன் இயங்கியதையும் பாண்டிய நாட்டின் மருத வளம், முல்லை வளம், குறிஞ்சி வளம், என நிலங்களின் வளங்களை அறிய முடிகிறது.

**மதுரைக்காஞ்சியில் சமூக வாழ்வியல்**

சங்க இலக்கியங்கள் தமிழர் சமூகத்தின் வாழ்வியல் பண்புகளை வெளிப்படுத்தும் முதன்மைச் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றுள் மதுரைக்காஞ்சி நகர வாழ்க்கையை மையமாகக் கொண்டிருந்தாலும், அந்நகரில் வாழ்ந்த மக்களின் விழாக்கள், கூத்து, பரத்தையர் வாழும் சேரி என,

*"முழவிமிழு மகலாங்கண்*
*விழவுநின்ற வியன்மறுகில்*
*துணைங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி*
*இன்கலி யாணர் குழூஉப்பல பயின்றாங்குப்*
*பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்"*

*(ம.கா. ப-49)*

மதுரைக்காஞ்சி சங்ககால சமூக வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான முக்கிய ஆவணமாக அமைகிறது.

**குடும்ப அமைப்பு**

சங்ககாலச் சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் விளங்கியது. குடும்ப உறவுகள் அன்பு, ஒற்றுமை மற்றும் அறநெறி அடிப்படையில் அமைந்திருந்தன. குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் தத்தம் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டனர். மதுரைக்காஞ்சியில் இல்லற வாழ்வின் சிறப்பு பல இடங்களில் சுட்டப்படுகிறது. குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மரியாதையும் செலுத்தியதாகக் காணப்படுகிறது. குறிப்பாக பெண்கள் குடும்பத்தின் மையமாக இருந்து இல்லற ஒழுக்கத்தைப் பேணியுள்ளனர் என்பதை, "இளமகளிலும் இளையோறும் மகிழ்ந்திருத்தலும் முதியோர் பூ பண்ணியம் முதலியவற்றை விற்றலும்" (ச. இ.மூ.தெ. ப-317) என்ற தலைப்பில் மதுரைகாஞ்சி பாடல் குடும்பங்களுக்கு மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் உணர்த்துகிறது. இல்லற வாழ்க்கை தமிழர் பண்பாட்டில் அறவாழ்வின் அடித்தளமாகக் கருதப்பட்டதை இவ்வகைச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

**தொழில்சார் வாழ்க்கை**

மதுரைக்காஞ்சியில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட மக்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. வேளாண்மை, வாணிபம், கைவினை, உலோக வேலைப்பாடு, நெசவுத் தொழில், இசைக்கலை, போர்த்தொழில் ஆகியவை முக்கிய தொழில்களாக இருந்தன. விவசாயம் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருந்தது. மருதநிலப் பகுதிகளில் விளைந்த நெல் மற்றும் பிற பயிர்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்குத் துணைநின்றன.

*"குணகடற்கு இவர்தரும் குரூஉப்புனல் உந்தி,*
*நிவந்துசெல் நீத்தம் குளம்கொளச் சாற்றிக்*
*களிறுமாய்க்குங் கதிர்க் கழனி"(ச. இ.மூ.தெ.ப-270)*

என்ற வரிகள் வேளாண் வளத்தை எடுத்துரைக்கின்றன.

அதேபோல் வணிகர்கள் பல நாடுகளுடன் தொடர்பு கொண்டு வாணிபத்தில் ஈடுபட்டனர். கைவினைக் கலைஞர்கள் தங்கள் திறமையால் சமூகத்தில் தனித்த இடம் பெற்றிருந்தனர். இதனால் தொழிலடிப்படையிலான சமூக அமைப்பு நிலவியதையும் ஒவ்வொரு தொழிலும் மதிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

**சமூக உறவுகள் மற்றும் விழாக்கால வாழ்க்கை**

சங்ககால சமூகத்தின் முக்கியப் பண்பாக விருந்தோம்பல் விளங்கியது. விருந்தினரை வரவேற்று உபசரிப்பது அறமாகக் கருதப்பட்டது. மதுரைக்காஞ்சியில் நகர மக்கள் அன்பும் ஒற்றுமையும் கொண்டவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். பல்வேறு தொழில் மற்றும் சமூகப் பிரிவினர் ஒருங்கிணைந்து வாழ்ந்தனர். மதுரை நகரில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டதாகவும் அதனை காண்பதற்கு வானத்தில் இருக்கும் தெய்வங்கள் இறங்கி வருவதாக

*“காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்*
*காலோர் காப்பக் காலெனக் கழியும்*
……… ………. ………. ……….
*தெள்ளரி பொற்சிலம் புபொலிப்ப வொள்ளழற்”*
*(ம.கா. ப-61)*

மதுரைக்காஞ்சி பதிவு செய்கிறது. கோயில் விழாக்கள், பொதுவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மக்களை ஒன்றிணைக்கும் சமூகத் தளங்களாக விளங்கின. சமூக வாழ்க்கையில் பரஸ்பர மரியாதை, ஒழுக்கம் மற்றும் பொது நலச் சிந்தனை காணப்பட்டன. சமூக உறவுகள் அறநெறி அடிப்படையில் அமைந்திருந்ததால் மக்கள் அமைதியாக வாழ்ந்தனர்.

**பொருளாதார வளமும் வாணிப வளர்ச்சியும்**

தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார வளத்தையும் வாணிப முன்னேற்றத்தையும் தெளிவாகப் பிரதிபலிக்கும் பாண்டியர் தலைநகராகிய மதுரை, அரசியல் மையமாக மட்டுமன்றி தென்னிந்தியாவின் முக்கிய வாணிப நகரமாகவும் திகழ்ந்தது.

நகரின் சந்தை அமைப்புகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபத் தொடர்புகள், பல்வேறு தொழில் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவை மதுரைக்காஞ்சியில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**உள்நாட்டு வாணிபம்**

சங்ககாலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொருட்கள் மதுரைக்கு கொண்டு வரப்பட்டன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை நிலங்களின் உற்பத்திப் பொருட்கள் மதுரை சந்தைகளில் பரிமாறப்பட்டன. மருதநிலத்திலிருந்து நெல், கரும்பு போன்ற வேளாண் பொருட்களும், நெய்தல் நிலத்திலிருந்து முத்து, சங்கு, மீன் போன்ற பொருட்களும் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன.

*“மழைகொளக் குறையாது புனல்புக மிகாது*
*கரைபொரு திரங்கும் முந்நீர் போலக்*
………… …………. …………. ………..
*நாளங்காடி நனந்தலைக் கம்பலை”*
*(ம.கா. ப-59)*

என்ற வரிகள் நகரில் நடைபெற்ற பரந்த வாணிபச் செயல்பாடுகளை உணர்த்துகின்றன. இதன் மூலம் மதுரை, உள்நாட்டு பொருளாதாரப் பரிமாற்றத்தின் மையமாக விளங்கியதை அறியலாம்.

**கடல்சார் வாணிபம்**

சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கடல்சார் வாணிபம் முக்கிய காரணமாக இருந்தது. பாண்டிய நாட்டின் துறைமுகங்கள் வழியாக வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. வணிகர்கள் மற்றும் பிற நாடுகளின் வணிகர்கள் கடல் வழியாக மதுரைக்கு வந்து வாணிபத்தில் ஈடுபட்டதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

*“வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்*
*பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்*
………… ………… ……….. ………….
*அல்லங் காடி யழிதரு கம்பலை”(ம.கா. ப-73)*

என்ற குறிப்பு வெளிநாட்டு வாணிபத்தின் சான்றாக அமைகிறது. பொன், மணிக்கற்கள், முத்துகள், வாசனைப் பொருட்கள் மற்றும் நெய்த

ஆடைகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து மதிப்புமிக்க பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

பொருளாதாரச் செய்திகள் பாண்டிய நாட்டின் செழிப்பை வெளிப்படுத்துகின்றன. வேளாண் வளம், உள்நாட்டு வாணிபம், கடல்சார் வாணிபம், தொழில் வளர்ச்சி மற்றும் சந்தை அமைப்புகள் ஆகியவை ஒருங்கிணைந்து பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்கின. இதன் காரணமாக மதுரை தென்னிந்தியாவின் மிகச் சிறந்த வாணிப நகரமாகத் திகழ்ந்தது.

**பாண்டிய அரசாட்சியின் சிறப்புகள்**

சங்ககால அரசியல் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக மதுரைக்காஞ்சி விளங்குகிறது. இந்நூல் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் ஆட்சிச் சிறப்புகளை விரிவாக எடுத்துரைக்கிறது.

ஒரு சிறந்த அரசனுக்குரிய நீதிநெறி, போர்த்திறன், மக்கள் நலப்பார்வை, நிர்வாகத் திறன் ஆகியவை மதுரைக்காஞ்சியில் பல இடங்களில் சுட்டப்படுகின்றன. இதன் மூலம் சங்ககால அரசியல் அமைப்பின் உயர்ந்த பண்புகளை அறிய முடிகிறது.

**நீதிநெறி**

தமிழர் அரசியல் மரபில் அறமும் நீதியும் ஆட்சியின் அடிப்படையாகக் கருதப்பட்டன. அரசன் தனிப்பட்ட அதிகாரத்தை மட்டுமன்றி, மக்களின் நலனைப் பாதுகாக்கும் அறங்காவலனாகக் கருதப்பட்டான். மதுரைக்காஞ்சியில் நெடுஞ்செழியன் நீதியுடன் ஆட்சி செய்த மன்னனாகப் போற்றப்படுவதை

*“அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்*

*……….. …………. ……….. …………*

*சிறந்த கொள்கை யறங்கூ றவயமும்”*

*(ம.கா. ப-66)*

என்ற கருத்து மன்னனின் அறநெறி ஆட்சியை வெளிப்படுத்துகிறது. அரசன் குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் நல்லவர்களைப் பாதுகாப்பதிலும் நடுநிலையுடன் செயல்பட்டான். இதனால் மக்கள் அச்சமின்றி வாழ்ந்தனர்.

**போர்திறன்**

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு வலிமையான படை அவசியமானதாகும். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் சிறந்த போர்வீரனாக மதுரைக்காஞ்சியில் சித்தரிக்கப்படுகிறார். அவரது படையில் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை மற்றும் காலாட்படை ஆகிய நான்கு வகைப் படைகளும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

*“பகைவர் நாடு பாழாயினமை……..*

*பாண்டிய மன்னனின் வெற்றி சிறப்புகள்”*

*(ம.கா. பக்-33-35)*

என்ற குறிப்பு படை வலிமையை எடுத்துக்காட்டுகிறது. தலையாலங்கானப் போரில் வெற்றி பெற்றதன் மூலம் நெடுஞ்செழியன் தனது வீரத்தையும் இராணுவத் திறமையையும் நிலைநாட்டியதாக நூல் புகழ்கிறது.

**மக்கள் நலன்**

*“நீர் தெவ்வு நிலை தொழுவர்*

*……… ……… ………. ……*

*பல் குத்துவர் வேல் கோவே”(ம.கா. பக் -26,27)*

சங்ககால அரசியல் கொள்கையில் மக்கள் நலன் முக்கிய இடம் பெற்றிருந்தது. அரசனின் செல்வம் மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனை நிலவியது. மதுரைக்காஞ்சியில் மக்கள் செழிப்புடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்ததற்கு பாண்டிய மன்னனின் கொடைச் சிறப்பும் ஒரு முக்கிய காரணமாக காணப்படுகிறது.

**நிர்வாகத் திறன்**

மதுரை நகரின் திட்டமிட்ட வளர்ச்சியும் பொருளாதாரச் செழிப்பும் திறமையான நிர்வாகத்தின் விளைவாகும். நகரின் தெருக்கள், சந்தைகள், அரண்கள், காவல் அமைப்புகள் ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் ஒழுங்காக இயங்கின.

*“அடுதிறலுயர் புகழ்வேந்தே!*
*நட்டவர் குடியுயர்க்குவை*
*செற்றவ ரரசுபெயர்க்குவை” (ம.கா. பக்-29, 30)*

என்ற குறிப்புகள் நிர்வாக அமைப்பின் செயல்திறனை வெளிப்படுத்துவதோடு பாண்டிய மன்னன், தன் நண்பர்தம் குடியை உயரச்

செய்பவனாகவும், பகைவர் தம் அரசை இழக்கச் செய்பவனாகவும் இருந்த நிர்வாக திறனை மேற்கண்ட பாடல் அழகாக வலியுறுத்துகிறது.

**மதுரைக்காஞ்சியில் நிலையாமைச் சிந்தனை**

பழந்தமிழ் இலக்கியங்களில் காஞ்சித் திணை மனித வாழ்வின் நிலையற்ற தன்மையை எடுத்துரைக்கும் திணையாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் மதுரைக்காஞ்சி, பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் ஆட்சிச் சிறப்புகளையும் மதுரை நகரின் வளத்தையும் விரிவாக விளக்கினாலும், அதன் அடிநாதமாக நிலையாமைச் சிந்தனையே அமைந்துள்ளது. உலக வாழ்வு, செல்வம், இளமை, அதிகாரம், புகழ் ஆகிய அனைத்தும் நிலையற்றவை என்பதை உணர்த்தி அறநெறியுடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை மாங்குடி மருதனார் வலியுறுத்துகிறார்.

**காஞ்சித் திணையும் நிலையாமையும்**

தொல்காப்பியம் குறிப்பிடும் புறத்திணைகளில் காஞ்சித் திணை முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மனித வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும். மதுரைக்காஞ்சியில் கவிஞர் மதுரையின் செழிப்பையும் பாண்டிய மன்னனின் பெருமையையும் எடுத்துரைத்த பின்பு, அவை அனைத்தும் காலத்தின் போக்கில் மாறக்கூடியவை என்பதை நினைவூட்டுகிறார்.

*"உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்*

*............ ............ ........... ............*

*கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை"*

*(ம.கா. ப-37)*

என்ற கருத்து பண்பு நலன் பாராட்டி நிலையாமையை உணர்த்துகிறது.

**அதிகாரம் மற்றும் அரசாட்சியின் நிலையாமை**

மதுரைக்காஞ்சியின் தனிச்சிறப்பு என்னவெனில், அது மன்னனைப் புகழ்ந்துகொண்டே அரசாட்சியும் நிரந்தரமானதல்ல என்பதை எடுத்துரைக்கிறது. முன்னோர் மன்னர்கள் ஆட்சி செய்தும் இன்று மறைந்து போனார்கள் என்பதை நினைவூட்டும் வகையில் கவிஞர் நெடுஞ்செழியனுக்கு அறிவுரை வழங்குகிறார்.

*"தவாப்பெருக்கத் தறாயாணர்*

*............ .......... .......... .........*

*மலர்தலை யுலக மாண்டு கழிந்தோரே"*

*(ம.கா. பக்-38,39)*

என்ற கருத்து அதிகாரத்தின் நிலையற்ற தன்மையையும், பாண்டிய மன்னனுக்கு முன் அவனுடைய மூத்தோர் ஆண்ட அரசும் வேந்தர் பலரும் அழிந்தமையையும் மேற்கண்ட பாடல் உணர்த்துகிறது.

**நிலையாமைச் சிந்தனையின் நவீனப் பொருத்தம்**

இன்றைய உலகிலும் பொருளாதார வளர்ச்சி, அதிகாரப் போட்டி மற்றும் தனிநபர் வெற்றியை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறைகள் காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் மதுரைக்காஞ்சியின் நிலையாமைச் சிந்தனை மனிதனை அறநெறி சார்ந்த வாழ்விற்கு வழிநடத்துகிறது. வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்ந்து சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்து இன்றும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

மதுரைக்காஞ்சி சங்க இலக்கியங்களில் நகர வாழ்க்கையை முழுமையாகப் பதிவு செய்த அரிய இலக்கியப் படைப்பாகும். மாங்குடி மருதனார் மதுரை மாநகரின் நகர நாகரிகம், சமூக வாழ்வியல், பொருளாதார வளம், பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் பாண்டிய அரசாட்சியின் சிறப்புகளை விரிவாக எடுத்துரைக்கிறார். இந்நூலின் வழி சங்ககாலத் தமிழர்கள் உயர்ந்த நகர நாகரிகத்தையும் ஒழுங்கமைந்த சமூக வாழ்வியலையும் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. குடும்ப அமைப்பு, தொழில்சார் வாழ்க்கை, வாணிப வளர்ச்சி, பெண்களின் சமூகப் பங்களிப்பு, கலை மற்றும் கல்வி வளர்ச்சி ஆகியவை அக்காலச் சமூகத்தின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன.

அதுமட்டுமின்றி, மதுரைக்காஞ்சி வெறும் நகர வருணனை நூலாக இல்லாமல், மனித வாழ்வின் நிலையாமையை எடுத்துரைக்கும் தத்துவ இலக்கியமாகவும் விளங்குகிறது. செல்வம், இளமை, அதிகாரம் ஆகியவை நிலையற்றவை.

அறமும் புகழும் மட்டுமே நிலையானவை என்ற கருத்தை மாங்குடி மருதனார் ஆழமாக வலியுறுத்துகிறார். எனவே மதுரைக்காஞ்சி சங்ககாலத் தமிழர் நாகரிக வரலாறு, சமூக அமைப்பு, அரசியல் சிந்தனை மற்றும் பண்பாட்டு மரபுகளை அறிந்து கொள்வதற்கான முதன்மை இலக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. தமிழர் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கும் ஆய்வுகளுக்கு இந்நூல் இன்றும் வலுவான ஆதாரமாக விளங்குகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. சுப்ரமணியன், அறிஞர் சா. வே., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மாணிக்கவாசகர் பதிப்பகம், 31-சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை-600 108, மூன்றாம் பதிப்பு-செப்டம்பர் 2018
2. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48 தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001, நாற்பதாம் பதிப்பு- 2021
3. இராமமூர்த்தி, முனைவர் இ.ராம., மதுரைக்காஞ்சி (தெளிவுரை)(உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஜூன் 23-27 கோயம்புத்தூர், கங்கை சிறப்பு வெளியீடு), கங்கை புத்தக நிலையம், 23 தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017, முதற் பதிப்பு ஜூன் 2010
4. சுந்தரமூர்த்தி, முனைவர் கு., பேரா.இளையராஜா கண்ணன், முனைவர் ப.புஷ்பலதா, தமிழர் மரபு, வி. ஆர். ஒன் பதிப்பகம், திருவேற்காடு, சென்னை - 600 077, இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2024


**சுருக்கக் குறியீடு**

**1. த.இ. வ -** தமிழ் இலக்கிய வரலாறு

**2. ம. கா -** மதுரைக் காஞ்சி

**3. ச. இ.மூ.தெ -** சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும்

**4.ப** – பக்கம்

**5.பக் -** பக்கங்கள்